முதன்மை சார்பு நீதிமன்றம், கள்ளக்குறிச்சி
OS.No.109/2014
பி.சா.1 – யுவராஜன்
நாள் 16.06.2026
சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்விக்கப்பட்டு 9,10 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கேட்டு. எவ்வளவு பாகம் வேண்டி கேட்டுள்ளனர் என்றால் தெரியவில்லை. எத்தனை சர்வே எண்களில் உள்ள சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 4 சர்வே எண்கள். 4 சர்வே எண்களை தவிர கூடுதலான சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்திருந்தால் அந்த கூடுதல் சர்வே எண்களுக்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல, ஆட்சேபணை உள்ளது. எத்தனை சர்வே எண்களுக்கு வழக்கு என்பது எனக்கு தெரியாது என்றால் சரியாக ஞாபகமில்லை. வழக்கறிஞரிடம் கேட்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன், ஞாபகமில்லை. சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் 2 சர்வே எண்கள் மட்டும் நினைவில் உள்ளது மற்றவை நினைவில் இல்லை. நினைவில் உள்ள சர்வே எண்கள் என்னவென்றால் 279, 281. அவற்றின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

2. ஒவ்வொரு அயிட்ட சொத்தும் ஆதியில் யாருக்கு சொந்தமாக இருந்தது தெரியுமா என்றால் பத்திரத்தை பார்த்து மஸ்தான் சாயீபு என்பவருக்கு சொந்தமானது என்பதை தெரிந்து கொண்டேன். நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அம்மா 1ம் பிரதிவாதியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, பாட்டி செல்லம்மாள் கூறி தெரியும். எந்தெந்த அயிட்ட சொத்து பூர்வீக சொத்து எது கிரைய சொத்து என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் சுயமாக சம்பாதித்த சொத்து, அரசாங்கம் மூலம் ஒப்படைவு பெற்ற சொத்து என சொன்னார். கிரையம் பெற்ற சொத்து எது என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கள் ஆதியில் என் தந்தை வழி பாட்டனார் ராமசாமிக்கு பாத்தியப்பட்டிருந்து அந்த சொத்தில் இருந்து கிடைத்த வருவாயை கொண்டு மற்ற சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. என் பாட்டனார் ராமசாமி, பாட்டி செல்லம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு என் அத்தைகளான இறந்த கமலம், 2,3 வாதிகள் , 1ம் எதிர்வாதி ஆகியோர்

வாரிசுகள் என்றால் சரிதான். அத்தை கமலத்தின் கணவர் குமாரசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர்களுக்கு 1ம் வாதி, 6 முதல் 8 பிரதிவாதிகள், 9,10 பிரதிவாதிகளின் தாயர் வேதவள்ளி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். இறந்த அத்தை 2ம் வாதியின் வாரிசுகள் 4 முதல் 6 வாதிகள் என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். பிராதில் காட்டியுள்ள வம்சாவளி பட்டியல் சரியானது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over to the witness and admitted by him/her to be correct.

Principal Sub Judge
Kallakurichi